★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: QB/8943/78

மலர்: 21 ஆனி: 7 றஜப்: 25 இதழ்: 129
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 21-6-79


இலங்கைத் தமிழர் பிரச்னை

# சமரசமாகத் தீர்வதையே இந்தியா விரும்புகிறது

## யாழ்ப்பாணத்தில் இந்தியத் தூதுவர் கருத்து

[யாழ்ப்பாணம்] இலங்கை தமிழர் பிரச்சனையை சமரசமாக தீர்த்து வைக்கவே இந்திய அரசு விரும்புகிறது. இதனையே எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தை சந்தித்த போது இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயும் தெளிவுபடுத்தினர்.

பாகிஸ்தானிலிருந்து ஒரு கோடி அகதிகள் இந்தியாவுக்குள் வந்ததினால், இந்திய அரச பங்களாதேஷ் விஷயத்தில் தலையிட்டது. ஆனால்

இவ்வாறு இலங்கை-இந்திய நட்புறவுக் கழகம் அளித்த வரவேற்பு வைபவத்தில் இலங்கையிலுள்ள இந்தியக் குடியரசின் உயர் ஸ்தானிகர் திரு. தேசமணி ஏபிரகாம் தெரிவித்தார். வரவேற்பு யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திர துரைசுவாமி தலைமையில் பொது நூலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

திரு. ஏபிரகாம் தொடர்ந்து பேசுகையில், "இந்தியாவும் இலங்கையும், வர்த்தகம் கலாச்சாரம், பொருளாதாரத்தில் நேச நாடுகளாகவேயுள்ளன. தற்போது யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள அப்பலோ சார்க்கசும் இலங்கை-இந்திய கலாச்சார ஒப்பந்தத்தின் அடிப்படையில் இங்கு வந்துள்ளது.

இந்தியா எப்போதும் தேசிய ஐக்கியத்தையே விரும்புகிறது. சகல மக்களும் சமத்துவமாக அங்கு வாழ்கிறார்கள். அனைவரும் இந்திய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உழைத்து வருகிறார்கள் என்றார்.

மாவட்ட நீதிபதி திரு. ஆசிர்வாதம் நன்றியுரை நிகழ்த்தினர். [செ]

# எரிபொருள் விலையேற்றத்தினல் ரயில்கட்டணம் உயராது

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றம் காரணமாக ரயில் கட்டணம் உயர்த்தப்படமாட்டாது. ரயில் சேவைகளும் குறைக்கப்படமாட்டாது.

ரயில்வே பொது முகாமையாளர் நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

ரயில் சேவைகள் அதிகரிக்கப்படும் என்றும் ரயில் கட்டணங்கள் உயர்த்தப்படலாம் என்றும் பொதுவாகக் கருதப்படுவதாகவும் இப்போதைய நிலையில் ரயில் சேவைகளைக் குறைக்கவோ ரயில் கட்டணங்களை உயர்த்தவோ உத்தேசிக்கப்படவில்லையென்று பொது முகாமையாளர் கூறியுள்ளார்.

கரிக்கோச்சிகள் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டு விட்டதால் இப்பொழுது சகல ரயில்களும் பெட்ரோலியப் பொருட்களைக் கொண்டே இயக்கப்படுகின்றன.

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து ரயில் சேவைகள் குறைக்கப்படலாம் என்று கருதப்பட்ட போதிலும் இது இப்போது செயல்படுத்தப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாக். அணுகுண்டு தயாரிப்பு இந்தியா கவலை

புதுடில்லி, ஜூன் 20

பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்கமுன் வந்திருப்பது இந்தியாவுக்கு மிகவும் கவலை அளிக்கிறது என்று இந்திய உதவிபிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான திரு. ஜகஜீவன்ராம் தெரிவித்துள்ளார். [இ]

## யாழ். மேல் நீதிமன்றத்தில் நிரந்தரமாக பணியாற்றுவார்

[யாழ்ப்பாணம்]

யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி ஜனுப் எம். ஜமில், இனி மேல் யாழ்ப்பாணத்திலேயே நிரந்தரமாக பணியாற்றுவார்.

நீதிபதி ஜனுப் எம். ஜமில் யாழ். மேல்நீதிமன்றத்திலும், மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திலும் நீதிபதியாக கடமையாற்றிவந்தார்.

தற்போது மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்திற்கு நீதிபதி திரு. [illegible] நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் நீதிபதி ஜனுப் எம். ஜாமில் இனிமேல் யாழ். நீதிமன்றத்திலும், வவுனியா மேல் நீதிமன்றத்திலும் கடமையாற்றுவார். [க]

## உகண்டா அதிபர் ராஜிநாமா!

[கம்பாலா]

உகண்டா அதிபர் பேராசிரியர் லூலே தமது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

## வேலைநிறுத்தம் செய்த 5 ஆயிரம் துறைமுகத் தொழிலாளர் வேலைநீக்கம்

ராவல்பிண்டி, ஜூன் 20

கராச்சியில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட துறைமுக ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 20 நாட்களாக நடைபெற்றுவந்த இந்த வேலைநிறுத்தம் சட்ட விரோதமானது என தொழில் நீதிமன்றம் ஒன்று தீர்ப்புவழங்கியிருந்தது.

## யாழ். மாவட்ட அமைச்சருக்கு கரவெட்டியில் வரவேற்பு

[வண்ணார்பண்ணை]

இம்மாதம் 26ம் திகதி கரவெட்டிக்கு விஜயம் செய்யும் யாழ் மாவட்ட அமைச்சர் திரு. ஏ. ஆர். எம். மன்சூரை கரவெட்டியில் வரவேற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கரவெட்டிப் பகுதியில் கன்னாரி பொல்லை என்ற கிராமப் பிரிவில் மாதிரிக் கிராமம் ஒன்றை அமைப்பதற்கு அரசு திட்டமிட்டதன் பிரகாரம், இத்திட்டத்தில் சுமார் 500 கட்டடங்கள் கட்டப்படவுள்ளன. இவற்றின் முதற்கட்ட வேலைகளுக்கு சம்பிரதாய முறைப்படி அத்திவாரக்கல் நாட்டி வேலைகளை ஆரம்பிக்கவே மாவட்ட அமைச்சர் திரு. மன்சூர் கரவெட்டிக்கு விஜயம் செய்யவுள்ளார். இது சம்பந்தமான உத்தியோகரீதியான ஏற்பாடுகளை யாழ்தேசிய வீடமைப்பு இலாகா செய்துள்ளது. [இ]

## லயனலுக்கு 24-ம் திகதி பிரிவுபசாரம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண அரசாங்க அதிபராக கடமையாற்றி, கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திரு. லயனல் பெர்னாண்டோவுக்கு எதிர்வரும் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். மாநகர சபையில் பிரிவுபசாரம் நடைபெறவுள்ளது.

வைபவத்திற்கு யாழ். மாநகரசபை முதல்வர் திரு. இ. விசுவநாதன் தலைமைவகிப்பார். [கெ]

குடும்பக்கட்டுபாட்டு திட்டத்திற்காக

## சிறந்த பணியாற்றும் மருத்துவ மாதுக்கு ரூபா 500 பரிசு!

[யாழ்ப்பாணம்]

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு சிறந்தபணியாற்றும் மருத்துவமாதுக்கு வருடாந்தம் 500 ரூபா ரொக்கப் பணத்தை பரிசாக வழங்க குடும்பக்கட்டுப்பாட்டுச் சங்கம் முன்வந்துள்ளது.

இப்பணத்தை முன்னாள் சுகாதார சேவை அத்தியட்சகர் டாக்டர் டபிள்யு விக்கிரமசிங்க குடும்பக்கட்டுப்பாட்டுச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

டாக்டர் விக்கிரமசிங்க குடும்பக்கட்டுப்பாட்டுத் துறையில் 25 ஆண்டுகள் சிறந்த பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. [இ]

## பல கொள்ளைகளில் இவருக்குத் தொடர்பு?

[யாழ்ப்பாணம்]

உரப்புலம் வாசி ஒருவரைக் கைது செய்த பொலிசார் அவர் சம்பந்தப்பட்ட பல கொள்ளைகள் பற்றிய தகவல்களைப்பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

அவரால் பாவிக்கப்பட்டதாகக்கூறப்படும் கைத்துப்பாக்கி ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

உரப்புலத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் வின்சன் என்பவரை ஆனைக்கோட்டைப் பொலிசார் சந்தேகத்தின் மீது கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியபோது, 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி அராலியிலுள்ள ஒரு வீட்டை உடைத்து நாற்பத்தி நாலாயிரம் ரூபாய் பெறுமதி வாய்ந்த தங்க நகைகளைக் கொள்ளை அடித்ததாகவும், 1979ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி வீடுஉடைத்து இரண்டாயிரத்து நூறு ரூபா பெறுமதிவாய்ந்த நகைகள், சேலைகள் ஆகியவற்றைக் கொள்ளை அடித்ததாகவும் 10-2-79ல் வேறு ஒரு இடத்தில் இரவு வேளை வீடுஉடைத்து ஆயிரத்தி எழுநூறு ரூபாய் பெறுமதி வாய்ந்த சேலைகளையும், வேறு பொருட்களையும் கொள்ளையடித்ததாகவும், வேறுஒரு இடத்தில்வீடுஉடைத்து நாலாயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த நகைகளைக் கொள்ளை அடித்ததாகவும் பொலிசில் அவர் ஒத்துக்கொண்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

வின்சன் வைத்திருந்ததாகக் கூறப்படும் கைத்துப்பாக்கி தன்னுடையதல்லவென்றும், அல்லைப்பிட்டி பஸ் எரிப்பு தொடர்பாக கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் இருக்கும் சேகர் என்பவரிடம் இருந்து வாங்கியதாகவும் பொலிசாரிடம் தெரிவித்துள்ளாராம்.

இதுசம்பந்தமாக விசாரணையின் பொருட்டு வேறுசிலரையும் பொலிசார் தேடிவருகின்றனர். [கொ]

இலங்கைத் தமிழர் நிலைபற்றி

## இந்திய மாணவர் அறிந்துகொள்ள 'அமிர்' விஜயம் உதவியது

### இங்கு வந்துள்ள சோமலேயின் புத்திரர் கூறுகிறார்

(பண்டத்தரிப்பு)

"எதிர்க்கட்சித்தலைவர் திரு அமிர்தலிங்கமும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் தமிழ்நாட்டிற்கு வருகை தந்து ஈழத் தமிழ் மக்களின் முக்கிய பிரச்னைகள் பற்றித் தெளிவாகத் தெரிவித்தபின்பே தமிழ்நாட்டு மாணவ சமுதாயம் உங்கள் நிலைமைகளை நன்கு அறிய முடிந்தது".

இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்துள்ள தமிழ்நாட்டு பிரபல எழுத்தாளர் திரு சோமலெயின் குமாரரும், அண்ணாமலை பல்கலைக்கழக விவசாயப்பட்டதாரிமாணவருமான திரு சோமசுந்தரம் வடலியடைப்பு ஐயனார் ஆலய முன்றலில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில்கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். இவருடன் தமிழ்நாட்டு அரசின் ஆஸ்தான கவிஞரும், பிரபல திரைப்பட பாடலாசிரியருமான திரு. கண்ணதாசனின் மகன் திரு. க. சீனிவாசனும் வந்திருந்தார். திரு. பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பு வைபவத்தில் பெருந்தொகையான இளைஞர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"தமிழ்நாட்டிலுள்ள மாணவர்கள் தமிழ் உணர்ச்சி மிக்கவர்கள். தமிழுக்காக எதையும் அர்ப்பணிக்க தயாராக இருப்பவர்கள். தமிழ் நாட்டு அரசாங்கங்கள் தமிழ்மொழிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, தமிழ்மொழியை அரசாங்க நிர்வாகத்தில் உயரிய தரத்தில் வைத்திருப்பதற்கு அங்குள்ள தமிழ் மாணவ சமுதாயத்தின் தீவிர தமிழ்ப்பற்றும் அவர்களின் உந்துதலுமே முக்கிய காரணமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கண்ணதாசனின் மகன் திரு சீனிவாசன் உரையாற்றுகையில் "தமிழ்நாட்டில் தற்போது ஊழலற்றநல்லாட்சி நடைபெறுவதாகவும், திரு கருணாநிதியின் மேடைப்பேச்சு, தமிழ்மொழிப்பற்று ஆகியன தம்மைமிகவும் கவர்ந்துவிட்டதாகவும் தெரிவித்தார். யாழ். பல்கலைக்கழக தமிழ்ப்பேராசிரியர் திரு. க. கைலாசபதியின் அழைப்பின் பேரில் வருகை தந்த இவர்கள் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலும் உரையாற்றுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கொட்டடி, சீனிவாசகம் வீதியில் ஆறு (6) பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு; நா. ரவீந்திரன், 276, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 2807

### பயிற்சி

Transistor ரேடியோ பயிற்சி ஆரம்பத்திலிருந்து அளிக்கப்படும். ரேடியோவைப் பற்றி எதுவுமே தெரிந்திருக்கத் தேவையில்லை விபரங்களுக்கு: National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம் 2752

### தேவை

கால் வெல்டிங் வேலை செய்யக் கூடிய அனுபவமுள்ள ஆட்கள் தேவை தகுதி உள்ளோருக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும். 151, கே. கே. எஸ். ரோட், கீரிமலை. 2816

யாழ். நகரில் பிரபல ஸ்ருடியோ ஒன்றுக்கு ஆங்கில அறிவுள்ள பெண் காசாளர் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல 2813, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2813

மின்பிடி உபகரணங்கள் விற்பனையிலும், புடவை விற்பனையிலும் அனுபவமுள்ளவர்கள் தேவை. விபரங்களுக்கு: "மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்", 16, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி; 7545 (2809)

40 வயதுக்கு மேற்பட்ட சமையல் ஆள் தேவை. ஆண் பெண் இரு பாலாரும் விரும்பத்தக்கது. பிடவைக் கடைக்கு சில்லறை வேலை செய்யக்கூடிய 15 வயதுக்குட்பட்ட ஆண்பிள்ளை தேவை. நேரில் வரவும். க. நாகமுத்து அன் சன், 48, 50, பெரிய கடை, யாழ்ப்பாணம். 2815

### CLASSES

I. C. M. A. Sect. A - Nov. 1979 classes have just been started Only few vacancies exist. Cyclostyled notes and suggested answers will be issued. B T.I. & I A B classes are also conducted: Jaffna Education Centre 22, Ramiah Chettiar Lane, Jaffna. 2810

### யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

மேற்படி சங்கத்தில் சேர்ந்துள்ள வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது.

முடிவு திகதி: 27-6-'79

மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்

74/3, அல்விரட் துரையப்பா வீதி, யாழ்ப்பாணம்.

1979-06-20 2817

## 20 பன்றிகள் கிணற்றில் விழுந்து பலி! 3 உயிர்தப்பின

[கனகபுரம்]

தோட்டக் கிணற்றில் தவறி விழ்ந்த பன்றிக் கூட்டம் பரிதாபமாக மாண்ட சம்பவம் கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த கனகபுரத்தில் நிகழ்ந்துள்ளது.

தோட்டக் கிணற்றில் இருந்து துர்நாற்றம் வீசுவதை அவதானித்த தோட்டச் சொந்தக்காரர் கிணற்றைச் சென்று பார்த்தபோது கிணற்றினுள் பன்றிகளின் குவியலைக் கண்டு பெருமதிர்ச்சிக்குள்ளானார்.

இச் செய்தியறிந்து பொதுமக்கள் திரண்டனர். இதனைத் தொடர்ந்து கிணற்றிலிருந்து பன்றிகள் எடுக்கப்பட்டபோது 20 பன்றிகள் இறந்து அழுகிய நிலையில் இருக்கக் காணப்பட்டன மூன்று பன்றிகள் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டன. [உடுப். அ]

## அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

அளவெட்டியைச் சேர்ந்த சபாபதி கந்தையா என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்தினதும் உடமைப் பொருள்களினதும் விடயத்தில்

சபாபதி கந்தையா மரணமெய்தியவர்

இல: மரணசாதன நியாயாதிக்கம்/T 21

சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை பெண் சத்தியதேவி, அளவெட்டி மனுதாரர்

எதிராக

1. கந்தையா சிவகுருநாதன்
2. கந்தையா திருநாவுக்கரசு
3. கந்தையா மகள் சுகுணதேவி
4. சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை சகலரும் அளவெட்டி

எதிர்மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு இதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு ஆனி மாதம் 22-ந் திகதி முற்பகல் 10-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் மூற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1978-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி ஒப்பம்

மூ. நல்லலிங்கம், பதிவாளர்.

செ. புண்ணியமூர்த்தி, விண்ணப்பதாரரின் சட்டத்தரணி. 2800

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பு தேசிய லொத்தர்சபையின் தலைமைக்காரியாலயத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 725-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு!

முதலாவது பரிசு

25 M 0030

ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு

28 H 0022

ரூபா 40,000

மூன்றுவது பரிசு

26 H 0177

தலா 1,222 ரூபா 20 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 21 A 0133 | 23 A 0725 |
| 23 A 0964 | 27 A 0705 |
| 05 B 0875 | 09 B 0447 |
| 11 C 0464 | 20 C 0653 |
| 09 D 0415 | 10 D 0900 |
| 16 D 0438 | 05 E 0013 |
| 15 E 0915 | 16 F 0560 |
| 16 F 0595 | 20 F 0735 |
| 22 F 0594 | 32 F 0647 |
| 04 G 0664 | 14 G 0362 |
| 28 G 0301 | 32 G 0218 |
| 03 H 0225 | 07 H 0598 |
| 09 H 0266 | 11 H 0660 |
| 26 H 0651 | 27 H 0601 |
| 30 H 0599 | 01 J 0135 |
| 05 J 6924 | 06 K 0648 |
| 07 K 0428 | 21 K 0712 |
| 28 K 0674 | 15 L 0856 |
| 19 L 0152 | 25 L 0864 |
| 05 M 0937 | 10 M 0954 |
| 10 N 0057 | 12 N 0759 |
| 14 N 0817 | 26 N 0155 |
| 26 N 0480 | 26 N 068[illegible] |
| 07 O 0730 | 08 O 0227 |
| 09 O 0436 | 16 O 0735 |
| 18 O 0940 | 19 O 0106 |
| 20 O 0898 | 21 O 0850 |
| 30 O 0345 | 31 O 0303 |
| 21 P 0600 | 31 P 0931 |
| 03 Q 0837 | 23 Q 0713 |
| 01 R 0708 | 02 R 0529 |
| 22 R 0282 | 06 R 0959 |
| 29 R 0583 | 29 R 0604 |
| 30 R 0545 | 30 R 0972 |
| 13 S 0771 | 15 S 0788 |
| 25 S 0142 | 28 S 0583 |
| 31 S 0507 | 07 T 0948 |
| 10 T 0300 | 14 T 0016 |
| 25 T 0279 | 01 U 0982 |
| 19 U 0459 | 30 U 0988 |
| 14 V 0318 | 20 V 0536 |
| 22 V 0076 | 04 W 0771 |
| 07 W 0794 | 11 W 0931 |
| 29 W 0061 | 13 X 0158 |
| 22 X 0903 | 24 X 0937 |
| 04 Y 0460 | 06 Y 0886 |
| 16 Y 0473 | 24 Y 055 |
| 29 Y 0872 | 31 Y 037[illegible] |
| 04 Z 0944 | 07 Z 0279 |
| 30 Z 0659 | |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

## இன்றைய பலன்

ஆனிமாதம் 7-ம் திகதி

[வியாழக்கிழமை]

(21-6-1979)

மேடம் : எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம். உடல்நலம் பாதிக்கப்படலாம். பொருளும் செலவாகும்.

இடபம் : ஒளிமயமான தினம், கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள். இன்று ஏற்படும் புதிய இருப்பு மூலை நிம்மதியை அளிக்கும். வாகனநலனுமுண்டு.

மிதுனம் : தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். அடுத்துக் கெடுப்பதற்கு சிலர் முனைவர். சகோதரவழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு.

கடகம் : மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். பயன்தரும் பிரயாணமொன்றும் மேற்கொள்ளப்படலாம். அறிஞர் ஒருவரின் சந்திப்பும் ஏற்படும், அறவழிநாட்டமுண்டு.

சிங்கம் : தெளிந்தமனம் தெய்வசிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்தவாழ்வும் உண்டு,

கன்னி : துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும், அரசியல்வாதிகளாயின் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளவும், வரவிலும் தடையுண்டு.

துலாம் : வாழ்க்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் குடும்பத்தில் அமைதி நிலவும். களத்திர வழியால் நன்மைகள் வந்து சேரும். நீண்டநாள் கனவு இன்று நனவாவதற்கு இடமுண்டு. சிறப்பானதினம்.

விருச்சிகம் : விஷப் பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்கநேரிடலாம் இன்று சும்மா இருப்பதே சுகம்.

தனுசு : குடும்பவாழ்க்கை இன்று சமமாக இருக்கும். தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார் டாக்டர்களுக்கு சிறப்பானதினம். பயன் உள்ள தொடர்புகள் பெருகும்.

மகரம் : வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள். தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும் சுபதினம்.

கும்பம் : கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றமுண்டு, வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்திகிடைக்கும், கடமையில் ஆர்வம் கிடைக்கும். டாக்டர்களுக்குச் செல்வாக்குப் பெருகும். நிம்மதியான தினம்.

மீனம் : இளமைநினைவுகள் நிழலாட்டம்போடும். காதலைத் தாக்கும் கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். பாலுணர்ச்சிமேலிடும். வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை


## வேலைக்கு உடனே ஆட்கள் தேவை

கண்ணுடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள பவுளர் (BUBBLERS), கெல்ப்பர் (HELPERS), புளோவர் (BLOWERS) போன்றவர்கள் தேவை. வேலை பழகுபவர்களும் (TRAINEES) உடனடியாகத் தேவை. உடனே நேரில் வரவும்,

சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்

நீர்வேலி. 2786

வெளிவந்துவிட்டது ! வேகமாக விற்பனையாகிறது !

1979 ஓகஸ்ற் G. C. E. (A. L.)

1980 ஏப்ரல் முதல் G. C. E. (A.L.) தேர்வுகளுக்குத் தோற்றும் மாணவர்க்கான

விலங்கியல் நூல்

# மனிதன் ஒரு சிறப்பு விலங்கு

நூலாசிரியர்கள்

மு. அற்புதநாதன் — கலாநிதி கா. சித்திரவடிவேலு

பக்கங்கள் : 118 விலை ரூபா 16·50

விற்பனையாளர்கள்

ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். விஜயலட்சுமி புத்தகசாலை, வெள்ளவத்தை.
டானியல் புத்தகசாலை, வெள்ளவத்தை. சக்தி நூலகம், மட்டக்களப்பு.
சிவசக்தி நூலகம், மட்டக்களப்பு. சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, திருமலை.
புஷ்பா ஏஜன்சி, திருமலை. லங்கா சென்றல் புத்தகசாலை, கண்டி.

பதிப்பாளர்

செட்டியார் அச்சகம்

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2818

செங்கலடி வங்கிக் கொள்ளை

# எதிரிகள் தன்னியக்கபிஸ்டல்ஒன்றுடன் போலித்துப்பாக்கியையும்வைத்திருந்தனர்

## இரசாயன பகுப்பாளர் சாட்சியம்

(கொழும்பு)

செங்கலடி இராமிய வங்கிக் கொள்ளை வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். எச். த அல்விஸ் முன்னிலையில் நேற்று முன்தினம் தொடர்ந்து விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. ஏ. ஏ. உபாலி சாட்சியமளித்தார்.

"சம்பவதினம் வேறு பொலிசாருடன் உன்னிச்சைக்குச் சென்றேன். இரகசியப் பொலிசார் சென்றதும் சார்ஜன்ட் ரெுட்றிக்கோவும் நானும் 2ஸ்ரீ8565 இலக்கக்காரைகாவல் புரிந்துகொண்டிருந்தோம். அப்போது பி. ப. 3 மணியளவில் சார்ஜன்ட் அவ்விடத்தை விட்டுச் சென்றார். நான் தொடர்ந்து காவல்புரிந்தேன். அப்போது கான்ஸ்டபிள் சொலமன் அங்கு வந்தார். பின்னர் நானும் சார்ஜன்டும் ஏருவூர் பொலிஸ் நிலையம் சென்றோம். நான் காரைக் காவல்புரிந்தபோது எவரும் அக்காரைத் தொடவில்லை" என்று திரு. உபாலி தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

அதன் பின்னர் கான்ஸ்டபிள் திரு. வி. ஜே. சொலமன் சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:-

சம்பவதினம் உன்னிச்சையில் 2 ஸ்ரீ 8565 இலக்கக் காரை சார்ஜன்ட் ரெுட்றிக்கோ கான்ஸ்டபிள் உபாலி ஆகியோரிடமிருந்து பொறுப்பேற்றுக் காவல்புரிந்தேன். பின்னர் மகேந்திரநாதன், சோமதாச ஆகியோர் இரவு 7 மணிக்கு பொறுப்பேற்றனர். நான் காவல்புரிந்தபோது எவரும் அக்காரைத் தொட அனுமதிக்கப்படவில்லை.

கான்ஸ்டபிள் திரு. ச. மகேஸ்வரநாதன் சாட்சியமளிக்கையில், "மறு நாள் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதியிடம் காரை ஒப்படைக்கும்போது எவரும் அக்காரைத் தொட அனுமதிக்கப்படவில்லை" என்றார்.

அதன் பின்னர் காலி உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. த. இரத்தினசபாபதி சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:-

சம்பவதினம் நான் மட்டுநகர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினேன். 18ந் தேதி இரகசியப் பொலிசாருடன் இன்ஸ்பெக்டர் டானியல் கான்ஸ்டபிள் சந்திரசேகரா ஆகியோருடனும் சுரவீரவுடனும் உன்னிச்சைக்குச் சென்றேன். இவர்கள் கைவிரல் அடையாள பதிவு பிரிவைச் சேர்ந்தவர்கள் காலை 8-30 மணிக்கு நாம் அவ்விடம் சென்றோம்.

### பொலித்தீன் பையில் மிளகாய்த்தூள்

புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, சோதனையும் நிகழ்ந்தது. பின் நான் காரைப் பொறுப்பேற்றேன். நானும் காரைச் சோதனையிட்டேன் அப்போது ஓர் இரும்புக்கம்பியை அக்காரினுள் இருந்து எடுத்தேன். அத்துடன் ஒரு "பொலித்தீன்" பையுள் மிளகாய்த்தூளும் ஒரு சேலைத் துணியும் இருந்தன. 4 சோடி செருப்புக்களும் ஒரு கோட்டுச் சாரமும் இருந்தன அவற்றை ஏருவூர் பொலிஸ் நிலையத்தில் பாரம் கொடுத்தேன்.

சாட்சியை பின்னர் எதிரிகள் தரப்பு சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் குறுக்கு விசாரணை செய்தார்

சட்: காரைத்தவிர வேறு பொருள்களில் கைவிரல் அடையாளம் இருக்கிறதா என சோதிக்கப்பட்டதா?- இல்லை.

சட்: டயரை உயர்த்த சில வேளைகளில் இந்த இரும்புக் கம்பி பாவிக்கப்படலாம்?- ஆம்.

சட்: சாவி காரில் உரிய இடத்தில் இருந்தது?- ஆம்.

சட்: நீர் சாவியைப் பொறுப்பெடுத்தீர்?- ஆம்.

சட்: அதுவும் சோதிக்கப்பட்டதா?- என்றால் கூறமுடியாது. வெளியில் எடுத்துச் சோதித்தார்களா, அப்படியே இருக்க சோதித்தார்களா என்பதையும் என்னால் கூற முடியாது.

ஜூரிசபைத் தலைவர்: காரினுள் ஏதாவது ரவை கண்டெடுக்கப்பட்டதா?- எனக்குத் தெரியாது.

பின்னர் இரகசிய பொலிஸ் பிரிவு கைவிரலடையாள பதிவாளரும் உதவிப்பொலிஸ் அதிபருமான திரு என். ஐ. ரத்நாயக்க சாட்சியமளித்தார்.

இருபது வருடமாக நான் இத்துறையில் பணியாற்றுகிறேன். வெளிநாடுகளிலும் பயிற்சி பெற்றுள்ளேன் நானே இன்று பிரதான உத்தியோகத்தராக இருக்கிறேன். இன்ஸ்பெக்டர் டானியலும் எனது அலுவலகத்தில் பணிபுரிகிறார். 18ந் தேதி டானியலிடமிருந்து 2 ஸ்ரீ 8565 இலக்க காரில் எடுக்கப்பட்ட 21 கைவிரல் அடையாளப்படங்கள் எனக்குக் கிடைத்தன அவற்றில் 6 தெளிவற்றவை.

8 படங்கள் செல்வநாயகத்தினதும் கைவிரல், உள்ளங்கை அடையாளங்களைக் கொண்டவை. மிகுதி 7 படங்கள் வேறு ஆட்களினுடையவை.

(அந்த 7 படங்களையும் சாட்சி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்)

எனது பணிப்பில் இப்படங்களில் இரண்டு பெருப்பிக்கப்பட்டன.

முதலாம் எதிரியின் கைவிரல் உள்ளங்கை அடையாளங்கள் எனக்குக்கிடைத்தன. 2ம், 3ம் எதிரிகளின் கைவிரல் உள்ளங்கை அடையாளங்களும் கிடைத்தன.

4ம் எதிரியின் விரல், உள்ளங்கை அடையாளங்களும் கிடைத்தன.

எதிரிகள் நால்வரினதும் கைவிரல், உள்ளங்கை அடையாளங்களை காரில் எடுக்கப்பட்ட அடையாளங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தேன்

எனது அபிப்பிராயப்படி முதலாம் எதிரியின் வலது உள்ளங்கை அடையாளமும் 4ம் எதிரியின் இடது பெருவிரல் அடையாளமும் ஒத்திருக்கக்காணப்படுகின்றன. ஏனையவை 1ம், 2ம், 3ம், 4ம் எதிரிகளின் கைவிரல் அடையாளங்களுடன் ஒத்திருக்கவில்லை.

கைவிரல் அடையாளங்கள் விஞ்ஞான ரீதியாக நிரூபணங்கள். எனது அனுபவத்தில் எவராவது இருவரின் கைவிரல் அடையாளங்கள் ஒத்திருந்ததை நான் அறியவில்லை.

முதலாம் எதிரியின் வலது உள்ளங்கை அடையாளம் தெளிவாக உள்ளது 4ம் எதிரியின் இடது பெருவிரல் அடையாளமும் தெளிவாக உள்ளது

சாட்சியை பின்னர் திரு சிவசிதம்பரம் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: எப்போ காரில் எடுக்கப்பட்ட அடையாளங்கள் உமக்கு கிடைத்தன?- 29-3-78இல்.

சட்: இவற்றை எப்போது சோதித்தீர்?-21-4-78இல்

அன்று ஏதாவது ஒரு முடிவுக்கு வந்தீரா? ஆம். இன்று நான் கூறிய முடிவே அது.

சட்: அதிகாரிகளுக்கு அது பற்றி அறிவித்தீரா? ஆம், ஏருவூர் பொலிஸ் நிலைய அதிபருக்கு அன்று கடிதமூலம் அறிவித்தேன்

சட்: அதற்கு ஏதாவது ஆதாரவு உண்டா?- அது பதிவுத்தபாலில் அனுப்படவில்லை.

சட்: அது பற்றி உமக்கு ஏதாவது பதில் கிடைத்ததா?- இல்லை.

சட்: மே 5ந் தேதிக்குமுன் ஏருவூர் பொலிஸ் அதிகாரிக்கு உமது அந்தக்கடிதம் எப்படியாவது கிடைத்திருக்கும்?- ஆம்.

சட்: ஆனால் மே 5ந் தேதி முதல் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப்பத்திரிகையில் நீர் ஒரு சாட்சியாக இல்லை?- குறிப்பிடப்படவில்லை.

சட்: முதலாம் எதிரியினது என நீர் கருதும் அடையாளம் காரில் எங்கு காணப்பட்டது?- சாரதியின் பின்புற ஜன்னல் கண்ணாடியில் உட்புறமாக காணப்பட்டது.

சட்: 4ம்எதிரியினது?-சாரதி கதவின் வெளிப்புறக் கைப்பிடியில்.

சட்: அந்தக் கைப்பிடி எஞ்சின் பக்கம் இருக்கிறது?- ஆம

சட்: சாரதி செல்வநாயகத்தின் கைவிரல்அடையாளத்தை தவிர்த்துவிட்டீர்?-ஆம்.

சட்: 8 அடையாளங்கள் சாரதியுடையவை?- ஆம்.

சட்: 2 அடையாளங்கள் 1ம், 4ம் எதிரியுடையவருக்கு சமமானவை?- ஆம்.

சட்: ஏனையவை எதிரிகளுடையவையுடன் ஒத்திருக்கவில்லை?-ஆம்.

சட்: கார் தவிரவேறு பொருள் எதையும் சோதித்து அறியவில்லை?- இல்லை

நீதிபதி: ஏனைய அடையாளங்கள் எதிரிகளுடையவை அல்ல என்பதில் உமக்கு பூரண திருப்தி?-ஆம்.

பின் அரச சட்டத்தரணி மறுவிசாரணை செய்தார்.

அரசு சட்: வேறுபொருள் உமக்கு சோதனைக்கு அனுப்பப்படவில்லை?- இல்லை.

அரசு சட்: றிவோல்வரில் அடையாளங்கள் பதிய இடமுண்டா?- ஆம்.

சட்: எவ்வளவு காலத்தின் முன் ஏற்பட்ட அடையாளங்கள் இவை எனக் கூறமுடியுமா?-இல்லை.

சட்: வேறு காரணங்களால் இவ்வடையாளங்கள் அழியலாம்?- ஆம்.

சட்: காலநிலை, தூசி, வேறு பொருள்களின் தொடர்பு முதலியவற்றால் இவ்வடையாளங்கள் இல்லாது போகும்?- ஆம்.

### டானியல் சாட்சியம்

பின்னர் கைவிரல் அடையாள பிரிவைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் திரு. எம். டானியல் சாட்சியமளித்தார்.

சம்பவதினம் கிடைத்த தகவலின் பேரில் மறுதினம் உன்னிச்சைக்கு வேறு பொலிசார் சிலருடன் காலை 8 30 மணியளவில் சென்றேன் 2ஸ்ரீ8565 இலக்ககாரைபரிசோதித்தேன் 21 கைவிரல், உள்ளங்கை அடையாளங்கள் அக்காரில் இருந்தன அவை கண்ணுக்குத் தெரியாதவையாக இருந்தன. பின் நான் பவுடரை அவதானமாக உபயோகித்து அவற்றைக் கண்டுபிடித்தேன்.

உள்ளங்கை அடையாளம் காரின் பின்புற கதவு கண்ணாடியில் உட்புறமாக இருந்தது. அதில் கைவிரல்கள் மேற்புறமாக இருந்தன.

இன்னுமொரு அடையாளம் சாரதியின் கதவின் கைப்பிடியில் இருந்தது இடது கை பெருவிரல் அடையாளம் அது அது முன்பக்கம் நோக்கியதாக இருந்தது. நான் சோதித்த கார் 2ஸ்ரீ8565 இலக்கமுடையது. அக் காரின் கைப்பிடியின் நடுப் பகுதியில் கை விரல் அடையாளம் இருந்தது. அக் கைப்பிடி பின்புறமாக பிணைக்கப்பட்டிருந்தது.

திரு. சிவசிதம்பரம் சாட்சியை குறுக்குவிசாரணை செய்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

---

## மக்கள் கருத்து

### அருவருக்கத்தக்க செயல்

கடந்த 11-6-79 அன்று வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோயில் பொங்கல் திருவிழாவிற்கு நானும் எனது நண்பர்களும் காரில் சென்றோம். போகின்றபாதையில் விசுவமடுப்பகுதியில் அமைந்துள்ள மாணிக்கப் பிள்ளையார் கோவில் முன்றலில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து அடியார்கள் தாகம் தீர்த்துக் கொண்டிருந்த போது நாமும் காரைவிட்டு இறங்கி தண்ணீர்குடித்தோம் அந்த நேரம் கோவில் முன்றலில் அமைந்துள்ள ஒரு மேடையில் கர்நாடக இசைக்கச்சேரி பக்கவாத்திய சகிதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது மிகவும் சந்தோஷமாக நானும் எனது நண்பர்களும் ரசித்துக் கொண்டு நின்றபோது அவர்கள் மேடைக்குமுன்னும் அவர்கள் இசைக்கச்சேரிக்குத் தடையாக அருவருப்பான உடைகளுடன் டுவிஸ்ட் நடனங்கள் நடைபெற்றன. இதைச்சில பக்தர்கள் தடுத்து நிறுத்தப் போன போது விஷயம் கைகலப்பில் முடிந்து இசைக்கச்சேரி இடையில் நிறுத்தப்பட்டது.

ஒரு தெய்வ சந்நிதான முன்றலில் கர்நாடக இசைக்கு மத்தியில் நிலையில்லாத 'டுவிஸ்' நடனத்தை அலங்கோல உடையுடன் நடாத்தி கோவிலுக்கு ஒரு களங்கத்தை உண்டு பண்ணியுள்ளார்கள் என்றே இதனைச் சொல்ல வேண்டியுள்ளது. புனித ஆலயங்கள் முன்பாக இவ் வித நடனங்கள் தடைசெய்யப்பட வேண்டும்.

வி. எஸ். செல்வராசா
சச்சமொட்டை,
யாழ்ப்பாணம்

ஃ ஃ ஃ

### கர்ப்பிணித் தாய்மார் ஏமாற்றம்

கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய்மாருக்கான பரிசோதனையும் ஆலோசனையும் இரண்டு வாரத்திற்கொரு தடவை நடைபெற்று வருகின்றது: இம் மாதம் 18ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவேண்டிய கர்ப்பிணி தாய்மாருக்கான பரிசோதனையும் ஆலோசனையும் நடைபெறவில்லை இதனால் மிருசுவில், எழுதுமட்டுவாள், உசன், விடத்தற்பளை; ஒட்டுவெளி, போன்ற தூரமான இடங்களிலிருந்து வந்திருந்த கர்ப்பிணி தாய்மார் ஏமாற்றத்துடன் வீடு திரும்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இப் பரிசோதனை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி (எம் ஓ எச்)யால் நடாத்தப்பட்டு வருகின்றது இனியும் இப்படியான ஏமாற்றம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வது சுகாதார திணைக்களத்தாரின் முக்கியகடமையாகும்.

க. ம. சுந்தரலிங்கம்
தவசிக்குளம்.
கொடிகாமம்

---

## "எமக்குள் ஒரு பகுதியினரை அடக்கி ஆளும்வரை சுதந்திரம் கிடையாது"

### புகையிரதஊழியர் கூட்டத்தில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

"நாம் எம்மவரில் ஒரு பகுதியினரை அடக்கி ஆளும்வரை எமக்கு சுதந்திரம் கிட்டப் போவதில்லை எவ்வேளம்மத்தியில் இருக்குப் சாதி என்றும் பேயை எதற்ற எல்லா இயக்கங்களும் முன்னின்று உழைக்க வேண்டும் கதடியில் அண்மைக்காலமாக நடைபெறும் சம்பவங்கள் மிகவும் கவலைக்கிடமானவை. இத்தியசெயல்களுக்கெதிராக நடைபெற்ற கறுப்புப்பட்டி இயக்கத்தில் புகையிரதப் பகுதி ஊழியர்களும் கலந்து கொண்டுள்ளதைக் கண்டு பகிழ்ச்சியடைகிறேன்" என்று நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற புகையிரதப் பகுதி ஊழியர் சங்கத்தின் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு அ அமிர்தலிங்கம் குறிப்பிட்டார் இவர் பேசுகையில் "தமிழ் ஊழியர்களின் தனித்துவமான பிரச்சினைகளான மொழிப் பிரச்சினை போன்றவற்றிற்காக குரல்கொடுப்பவை மொழிவழித் தொழிற்சங்கங்களே எனவே தமிழ்த்தொழிலாளர்கள் எல்லோரும் மொழிவழித் தொழிற்சங்கங்களில் அங்கத்தவர்களாகச் சேரவேண்டும் தமிழினம் தான் தனியான தேசிய இனம் எனத் தீர்மானித்தபின் தனக்கென வேறான தொழிற்சங்கங்களை அமைப்பது தவிர்க்கமுடியாதது மாத்திரமல்ல தர்க்கரீதியானதுமாகும் என்று கூறினார்.

இக்கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகளாகப்பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: கி. சந்தையா துணைத்தலைவர்கள்: வே குமாரசுந்தரம், இ சௌந்தரநாயகம், பொதுச்செயலாளர்: ந இராசேந்திரன், இணைச் செயலாளர்கள்: சி இலிங்கவேலாயுதம், க.கணேசமூர்த்தி நிதிச்செயலாளர்: பாலசுப்பிரமணியம், துணை நிதிச்செயலாளர்கள்: சி நாகேந்திரன், பே. மரியதாஸ், பத்திராதிபர்: வே. குமாரசுவாமி ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

(ஈ)

---

## வெற்றிலைக்கேணி அந்தோனியார் உற்சவம்

(சாவகச்சேரி)

வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலையில் வழிபாடுகளும் திருப்பலிப் பூசையும் நடைபெற்று வருகின்றன. இன்றிரவு விசேஷ ஆராதனைகளும் திருப்பலிப்பூசையும் நாளை வெள்ளிக்கிழமை காலை திருவிழா பாட்டுப் பூசையும் நடைபெறுகின்றன.

எண்ணெ பாவனையில் சிக்கனம் இன்றேல்

# 10 ஆண்டுகளில் உலகில் பெரும் நெருக்கடி ஏற்படும்

## சவூதிஅரேபியஎண்ணெஅமைச்சர்எச்சரிக்கை

றியாத், ஜூன் 20 உலகநாடுகள் எண்ணெ பாவனையில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கத் தவறும்பட்சத்தில் இன்னும் 10 ஆண்டுகளில் உலகில் படுமோசமான நெருக்கடி தோன்றும் என்றும் சவூதி அரேபிய எண்ணெத்துறை அமைச்சர் ஜுனுப் ஜமானி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

10 ஆண்டுகளில் எண்ணெயின் விலை 3 அல்லது 4 மடங்கு அதிகரிக்கும் என்றும் இதனால் உலகில் பொருளாதார நெருக்கடி வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியன ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எண்ணெ உற்பத்தி செய்யப்படும் நாடுகளில் இந்த நூற்றாண்டின் இறுதியில் எண்ணெ உற்பத்தி வருடாந்தம் 1கோடி 60 லட்சம் பீப்பாக்களால் குறையும் என்றும் அவர் கூறியுள்ளார். (இ)

## ஆகஸ்டில் சீன-ரஷ்ய பேச்சுக்கள்

லண்டன், ஜூன் 20 ரஷ்ய—சீன நட்புறவுப் பேச்சுக்கள் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் மாஸ்கோவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேச்சுவார்த்தைகளை ஆகஸ்டில் ஆரம்பிக்க ரஷ்யா சீனுவிடம் விருப்பம் தெரிவித்துள்ளது.

இதற்கு சீனு இன்னமும் பதில் அளிக்கவில்லையாயினும் சீனு விரைவில் இணக்கம் தெரிவிக்கும் என நம்பப்படுகிறது. (இ)

## ஜனுதிபதி வெகுமதி

[கொழும்பு]

நாட்டுக்குநன்மைதரும்புதிய கண்டுபிடிப்புக்களையும் விஞ்ஞான முயற்சிகளையும் மேற்கொள்பவர்களுக்கு ஜனுதிபதி விசேட வெகுமதி வழங்க உள்ளார்.

இதற்கான சட்ட மூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட உள்ளது. (ம-இ)

## சந்தேகமாக நகரில் நடமாடிய இரு இளம் பெண்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

[யாழ்ப்பாணம்]

யாழ், நகரில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இரு இளம் பெண்களுக்கு 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

யாழ். நீதவான் திரு. விமல திஸநாயக்கா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை நடைபெற்றது.

இவ்வழக்கில் யாழ். நகரில் மணிக்கூட்டு வீதியில் இரவு நேரத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாக, காரைநகர் காமாட்சி கோவிலடியை சேர்ந்த தம்பிப்பிள்ளை இந்திரா [25 வயது], ஆனைக்கோட்டை கூழாவடி கனகசபை பிலோமினு [23 வயது] ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஏ. ஜெகதீசன் ஆஜரானுர். பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் எஸ். சிற்றம்பலம், கான்ஸ்டபிள் இரத்தின சபாபதி வழக்கை நடத்தினுர்கள்.

### மற்ஞெரு யுவதி கைது

யாழ். மணிக்கூட்டு வீதியில் இரவு நேரத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாக இம்மாதம் 13-ம் திகதி கைதான பருத்தித்துறை இன்பருட்டியைச் சேர்ந்த சாம்பசிவம் சந்திரோதயம் [23 வயது] கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார், இதைத் தொடர்ந்து நன்னடத்தை அதிகாரியிடமிருந்து நீதிபதி அறிக்கை கோரி விசாரணையை ஒத்திவைத்தார். [கொ]

## பயிற்சிபெற்ற 22 தோட்ட ஆசிரியர்களுக்கு நியமனம்

[நெல்லியடி]

கடந்த ஆண்டு பயிற்சியை முடித்து வெளியேறிய 22 தோட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கு மிகவிரைவில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் கல்வி அமைச்சின் மேலதிக கல்வி மாஅதிபதியைச் சந்தித்து இவ்வாசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

இதனையடுத்து மேலதிக கல்விமா அதிபதியான திரு. வி பி ரத்னுயக்கா இவ்வாசிரியர்களுக்கு தோட்டப்பாடசாலைகளிலே விரைவில் நியமனம் வழங்கப்படுமெனவும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான சம்பளமும் வழங்கப்படுமெனவும் உடுப்பிட்டிப் பிரதிநிதியிடம் தெரிவித்துள்ளார். [அ]

## ஏக தின லட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

புன்னுலைக்கட்டுவன் வடக்கு கட்டுக்குள ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில், நாளை வெள்ளிக்கிழமை ஒரே தினத்தில் அன்னை துர்க்காதேவியின் லட்சம் நாமங்களால் விசேட அர்ச்சனை வழிபாடு நடைபெறவுள்ளது.

அன்று அதிகாலை 5 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், அதனைத்தொடர்ந்து, ஸ்ரீசக்கரயந்திர பூசையும், சண்டிகாஹோமமும் நடைபெறும்.

காலை தொடக்கம் அர்ச்சனை ஆரம்பமாகி மாலை 6 மணி வரைநடைபெறும். கிரியைகளை, ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ ந. சபாரத்தினக் குருக்கள் நிறைவேற்றிவைப்பார். [செ]

## "ஞானச்சுடர் சம்பந்தர்"

[யாழ்ப்பாணம்]

"தோணிபுரத்திலே தோன்றி ஞானச்சுடர் விளக்காய் நானிலமும் ஒளிபரப்பி சிவசமயப் பெருநிதியாய், செம்மைமணி முடியாய்த் திகழ்ந்த சம்பந்தப்பெருமானுக்கு சைவமக்கள் பெருவிழா எடுத்து கொண்டாடுவது சாலப் பொருத்தமாகும்"

இவ்வாறு யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூசை விழாவில் கல்லூரியின் நூலக அதிபர் செல்வி பரமேஸ்வரி சின்னத்துரை பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் செல்வி கீதாவும் பேசினுர். திரு. கே. நடராஜாவின் பண்ணிசையும் நடைபெற்றது. [கு]

# யாழ். மாவட்ட மீனவருக்கு 11 பிரத்தியேக வங்கிகள்


## மக்கள் வங்கி திறக்கும்

[உடுப்பிட்டி]

மக்கள் வங்கி, யாழ், மாவட்ட மீனவர்களுக்கு விமோசனமளிக்குமுகமாக யாழ். மாவட்டத்தில் பதினெரு பிரத்தியேக வங்கிகளைத் திறந்து வைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அமைச்சர் ஜனுப் ஏ. ஆர். மன்சூரின் நடவடிக்கையைத்தொடர்ந்து விரைவில் இம்மீனவர் வங்கிகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இவ்வங்கிகள் மூலம் கடற்ருெழிலாளர்களின் பிரச்னைகள் நீக்கப்படுவதுடன் மீன்பிடி உபகரணங்கள் வாங்குவதற்கும், கடற்ருெழிலுக்குமான கடன் வசதிகளை மீனவர்கள் பெற்றுக்கொள்வதற்கும் வழி செய்யப்பட்டுள்ளதாக வடபிரதேச முகாமையாளர் தெரிவித்தார். (அ)

புத்தம் புதிய

யமஹா

மோட்டோர் சைக்கிள்கள்

விற்பனைக்குண்டு

(பிஞன்ஸ் வசதிகள் கிடைக்கும்)

YAMAHA It's a way of life.

விபரங்களுக்கு :-

த பிஞன்ஸ் கொம்பனி லிமிட்.,

191, மின்சார நிலைய வீதி, - யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7680

"தமிழ்சமூகத்திற்கு உரிமை கோரிநிற்கும் வேளையில்

# நம்முள் ஒரு சாராருக்கு உரிமைமறுப்பதா?"

## 'அமிர்' கவலை

[யாழ்ப்பாணம்]

"தமிழ்சமூகத்திற்கு இழைக்கப்படும் அநீதி பற்றியும் உரிமைக்காகவும் உலகநாடுகளிடம் குரல்கொடுக்கும் நாமே நம்மில் ஒருபகுதியினரின் அடிப்படை உரிமைகளை மறுப்பதும் அவர்களுக்குப் பாரதூரமான அநீதி வழங்குவதும் வேதனைக்குரிய, வெட்கப்படக்கூடிய விஷயமாகும்".

இவ்வாறு யாழ். திறந்தவெளி அரங்கில் சாதிவெறியினைக் கண்டித்தும், கறுப்புப்பட்டி, உண்ணாவிரதப் போராட்டங்களை ஆதரித்தும் நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

திரு. வி. சு. துரைராஜாதலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

"இந்த நாட்டிலே 1957ம் ஆண்டு இயற்றப்பட்டசட்டப்படி பொது இடங்களில் சாதியின் பெயரால் ஒருவர் புறக்கணிக்கப்பட்டால் அவ்வாறு புறக்கணிப்பது ஒரு குற்றம். அதைச்செய்தவர் சட்டத்தின் பிடியில் சிக்கவேண்டும். ஆனால் மாவிட்டபுரம் தேரடியில் நடந்தது என்ன? தேர் வடம் பிடிக்க ஒரு சைவனுக்கு உரிமையில்லையென்றால் அப்படித்தடுத்தவர்களைக் கைது செய்திருக்கவேண்டியது அங்கு கடமையிலிருந்த பொலிஸாரின் கடமை. ஆனால் பொலிசார் நடந்துகொண்ட விதம் ஆச்சரியமாக இருக்கிறது.

"இன்று சாதிப்பிரச்னை சமயத்தின் பேரால் தலைதூக்கியுள்ளது. நம்மில் பலருக்கு எல்லாமக்களையும் ஆண்டவன் சந்நிதியில் ஒன்றாக நடாத்த மனம் வருவதில்லை, 'எல்லா மனிதனிலும் காணப்படுகிற தெய்வீக சக்தியை வெளிக்கொண்டு வரவேண்டும். எல்லாரும் சமமானவரே' என்று தத்துவஞானி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். இதுதான் இந்துசமய தத்துவமும், இன்று தமிழ் சமூகம் இருண்டுபோய் இருக்கிறது.

"இன்று சமூகத்தில் புரையோடிய புண்ணாகக் கிடக்கும் இச்சாதி நோயை சத்திர சிகிச்சை மூலம்தான் தீர்க்க முடியும் என்றுவும் தாம்எடுத்த தீர்மானங்களை முதன்மையாக இதை நடைமுறைப் படுத்தவேண்டிய காலகட்டத்தில் இன்றுள்ளோம்".

### இந்த ஜே.பி.க்கள் மீது நடவடிக்கை வேண்டும்

யாழ் மாநகர முதல்வர் திரு. ஆர். விசுவநாதன் பேசுகையில் கூறியதாவது!

"தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த சில சமாதான நீதவான்கள் நீதிக்குப் புறம்பாகக் கைதடிப் பகுதியில் நடந்து கொள்கிறார்களென்று எண்ணும்போது வேதனையாக இருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் உரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் நமக்குள்ளேயே ஒரு போராட்டமா? சாதிப்பாகுபாட்டை உடனேயே எமது தலைவர்கள் களையவேண்டும். சாதியின் பெயரால் அநீதி இழைக்கும் சமாதான நீதவான் எவராக இருந்தாலும் அவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென தலைமைப் பீடத்தை வேண்டுகின்றேன். இருபதாம் நூற்றாண்டில் இத்தகைய செயல்கள் பெரும்வெட்கக் கேடானவை. இவற்றைத் தீர்ப்பதில் இன்றைய இளைஞர்கள் முன்னிற்பது பெருமைக்குரிய விஷயமாகும்."

### தலைவர்கள் செய்ய வேண்டியது

ஈழவிடுதலை இலக்குமுக்கியஸ்தர்களில் ஒருவரான கோவை

(6ம் பக்கம் பார்க்க)

## எதிரிகள் தன்னியக்க...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்: கதவைத் திறப்பதற்கு கைப்பிடியைபலமாக இழுக்கவேண்டியதில்லை? ஆம்.

சட்: கைப்பிடியின் நடுவில் பிடித்து இழுத்தால் கதவு திறக்குமா?- சற்று முன்புறமாக பிடித்து இழுக்கவேண்டும்.

சட்: உள்ளங்கை அடையாளம் கண்ணாடியில் எப்பகுதியில் இருந்தது?- மேற்பகுதியில்.

சட்: அக் கண்ணாடியை முழுமையாக உன்னே செலுத்தமுடியாது?-ஆம்.

சட்: இவ்வடையாளம் இரசாயனப் பொருள் பாவித்த பின்தான் தெரிந்தது? ஆம்.

சட்: 'ஸ்ரேரிங் வீலில்' இருந்து அடையாளமெதனையும் நீர் காணவில்லை?- இல்லை.

சட்: 'டயரைச் சோதித்தீரா?- ஆம், அதிலும் அடையாளமெதுவும் இருக்கவில்லை.

சட்; சாவியைச் சோதித்தீரா?- சாவியை நான் காணவில்லை.

சட்; 4 கதவுகளுக்கும் உள்புறமும் கைப்பிடிகள் உள்ளன?-ஆம்.

சட்: அவற்றையும் சோதித்தீர்?- ஆம், ஆனால் அடையாளம் எதுவும் அவற்றில் இருக்கவில்லை.

### நீதிபதி கேள்வி

நீதிபதி: "ஸ்ரேறிங் வீலை" திருப்பும்போது அழுத்தமாக கையைப் பிடித்தால் அடையாளங்கள் பெறமுடியாது போகுமா?- ஆம்.

நீதிபதி: கைக்கு ஏதாவது கவசம் அணிந்திருந்தாலும் அடையாளம் இருக்காது?- ஆம்.

சட்: திரு. சிவசிதம்பரம்; கைக்கு கவசம் அணிந்திருந்தால் கைப்பிடியில் விரல் அடையாளம் ஏற்படமுடியாது?- விரல் சில வேளைகளில் கவசத்தால் மூடப்படாதிருக்கலாம்.

சட்; விரல் அடையாளம் பதியக்கூடாது என்பதற்காகத்தானே கவசம் உபயோகிப்பார்கள்?

நீதிபதி: கவசமணியாது கைப்பிடியை ஒருவர் பிடித்து கதவைத் திறந்து உள்ளே ஏறியதும் பின்னர் கவசத்தை அணிந்துகொண்டு "ஸ்ரேறிங் வீலை" பிடித்திருந்தாலும் "ஸ்ரேறிங் வீலில்" கைவிரல் அடையாளம் இருக்காது?- ஆம்.

சி ஐ டி புகைப்படப்பிடிப்பாளர் கான்ஸ்டபிள் ஆர் சுரவீரரவைத் தொடர்ந்து உதவி அரசாங்க இரசாயன பகுப்பாளர் திரு பி ஏ ஜே மெண்டிஸ் சாட்சியமளித்தார். அரச சட்டத்தரணி திரு. குணசேகரா சாட்சியத்தை நெறிப்படுத்தினார்.

1978-03-24ந் தேதி ஒரு ஊர் பொலிஸ்நிலையம் சென்றேன். அங்கு 2/8565 இலக்க காரை பொலிசார் முன்னிலையில் சோதித்தேன். அதற்கு முன்னதாக பொலிஸ்நிலையத்தில் சில பொருள்களைச் சோதித்தேன். ஒரு .45 பிஸ்டல், ஒரு போலித்துப்பாக்கி, ஒரு சாரம், இரு இயந்திரத் துப்பாக்கிகள் ஆகியவற்றை நான் சோதித்தேன்.

பிஸ்டலை சோதித்தபோது அதிலிருந்து வீசிய மணம் அது அண்மையில் பாவிக்கப் பட்டிருந்ததைக் காட்டியது.

காரைச் சோதித்தபோது அதில் பின்புறமாக பல துவாரங்கள் காணப்பட்டன.

பின் ஆசனத்தை சோதித்தபோது வெடித்த சன்னம் ஒன்றைக் கண்டெடுத்தேன், இது .45 றிவோல்வரினால் வெடிக்கப்பட் சன்னமாகும். 32. ரவைகளை அந்த இயந்திர துப்பாக்கிகளில் பாவிக்க முடியும் எனினும் பொலிசாருக்கு 25 ரவைகள் பாவிப்பதற்கே அனுமதி உண்டு.

இப் பொருள்கள் அனைத்தும் எமது அலுவலகத்துக்கு கொண்டுவரப்பட்டன

எதிரிகள் வைத்திருந்த தன்னியக்க பிஸ்டல் 1911ம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தினருக்காக தயாரிக்கப்பட்டதாகும் அவர்கள் வைத்திருந்த மற்றையது ஒரு போலித் துப்பாக்கி'

(விசாரணை ஒத்திவைக்கப்பட்டது)

(ம)


நாகம்ஸ் (மன்னார்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்- பானுமதி
மதுரைவீரன்
(புதிய பிரதி)

Rio (Jaffna) Phone: 7607
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Last of the Vikings
(Color - Scope)


25-வது வாரம்
வின்சர் (யாழ்ப்பாணம்)
போன் 646
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(சங்கீதம் கலர்)

3-வது ஜனத்திரள் வாரம்
நாளை நாளை என்று நாளைப் பின்போடாது
இன்றே கண்டு களிக்கத் தவறாதீர்கள்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
முத்துராமன் - தேவிகா
கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
குறிப்பு: யாழ்நகரில் இதுவே கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.
(புதிய பிரதி)

ராஜா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
சௌகார் ஜானகி நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி ஈஸ்மன்கலர்

கொட்டகை நிறைந்த 2-வது வாரம்
REGAL (Jaffna) Daily at 2-00. 4-30, 7-00 & 9-30 p. m. only
Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

SHANTHI JAFFNA Daily: 4 Shows
(Phone 7642) 10-30, 4-30, 7-00 & 9-30 P.M.
Peter Sellers in
"The Return Of The PINK PANTHER"
scope - Color — Suspense—Comedy
Next attraction: "SWEET REVENGE"

ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த

உலகம் சுற்றும் வாலிபன்

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
மணிமேகலை

கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
மனோகரா (யாழ்நகர்)
ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ நடித்த
அவசரக்கல்யாணம்
(புத்தம்புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30 & 9-45
நெஞ்சம் மறப்பதில்லை
22ந் திகதி முதல்
ஒளவையார்

றியோ (யாழ். நகர்) போன் 7696 தினசரி 4 காட்சிகள்
காவல் தெய்வம்

மானிப்பாயில்

# இளம் விவசாயக் கழக விழாவும், பொருட்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட இளம் விவசாயக்கழகவிழாவும் பொருட்காட்சியும், விவசாய அறிவுப் போட்டியும் இம்மாதம் 23ம், 24ம் தேதிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

விவசாயத் திணைக்களமும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இணைந்து நடாத்தும் இவ்விழா காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறும்.

23ம் தேதி காலை 9-30 மணிக்கு அலங்கார ஊர்திகள் பவனியை யாழ் பொலிஸ் அதிபர் திரு லியோ பெரேரா ஆரம்பித்துவைப்பார்

பிரதம அதிதியாக விவசாய திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திரு எம் ஆர் சேனரத்னவும், பிரதம விருந்தினராக எதிர்க்கட்சி முதல்வர் திரு அ அமிர்தலிங்கமும் கலந்துகொள்வார்கள்.

காலை 10-30மணிக்குமானிப்பாய் எம் பி திரு வி தர்மலிங்கம் மங்கள விளக்கேற்றி வைப்பார். காலை 10-45 மணிக்கு யாழ். அரசாங்க அதிபர் திரு டி எம் ஆரியரத்ன தேசியக் கொடியேற்றிவைப்பார்; 10-40மணிக்குமாவட்ட விவசாய விஸ்தரிப்புஉத்தியோகத்தர் திரு நா சிவமுத்துலிங்கம் கழகக்கொடியேற்றிவைப்பார். 10-55மணிக்கு விவசாய திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திரு எம் ஆர் சேனரத்ன பொருட்காட்சியை ஆரம்பித்துவைப்பார்.

பிற்பகல் வானொலி விவசாய அறிவுப்போட்டியும், கலைநிகழ்ச்சியும் நடைபெறும்.

இரவு 7 மணிக்கு திரு நா சிவமுத்துலிங்கம் தலைமையில் நடைபெறும் விழாவில் அரசாங்க அதிபர் திரு டி எம் ஆரியரத்ன, மானிப்பாய் எம் பி திரு வி தர்மலிங்கம், எதிர்க்கட்சி முதல்வர் திரு ஏ அமிர்தலிங்கம், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம், யாழ். கல்விப் பணிப்பாளர் திரு ரி மாணிக்கவாசகர், விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திரு எம் ஆர் சேனரத்ன ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்.

24ந் திகதி நிகழ்ச்சிகளில் பிரதம அதிதியாக யாழ் மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் கலந்துகொள்வார். மாலை 4 மணிக்கு விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திரு எம் ஆர் சேனரத்ன மங்கள விளக்கேற்றி வைப்பார். அதனைத் தொடர்ந்து விநோத உடைப்போட்டியை மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு சாரி ஆரம்பித்துவைப்பார். மாலை 5 மணிக்கு திரு. இ வல்லிபுரம் வரவேற்புரை நிகழ்த்துவார். திரு நா சிவமுத்துலிங்கம் (மாவட்ட உத்தியோகஸ்தர்) தலைமையுரையை வழங்குவார்கள். 5-15 மணிக்கு வானொலி விவசாய அறிவுப் போட்டியும் மாலை 5-45 மணிக்கு கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். 6 மணிக்கு பார்வையாளர் விவசாய அறிவும் போட்டி நடைபெறும்.

இரவு 7-15மணிக்கு பேராதனை இ வி க பொறுப்பதிகாரி திரு ஏச் ஜி பிரேமரத்ன, யாழ், வாவட்ட அமைச்சின் செயலாளர் திரு யோகேந்திரா துரைசாமி, யாழ் மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் சிறப்புரை வழங்குவார்கள்.

இரவு 9 மணிக்கு யாழ் மாவட்ட அமைச்சர் ஜனாப் மன்சூர் பரிசில்களை வழங்குவார். (ஏ)

# "பிரமந்தன் ஆறு திட்டத்தை உடன் அபிவிருத்தி செய்க"

(நெல்லியடி)

பிரமந்தன் ஆறு படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்தில் காணி பெற்றோர் அந்நிலத்தில் உடனடியாக அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கான கண்டிப்பான உத்தரவை கிளிநொச்சிக் காணிப்பகுதியினர் வழங்கியுள்ளனர்.

மேற்படி திட்டப்பொறுப்பதிகாரி திரு. ஏ எட்வேட், காணிகளைப்பெற்றுக்கொண்டவர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் மேற்படி திட்டத்தில் நடைபெற்றுவந்த நீர்ப்பாசன வேலைகள் முடிவுற்றுள்ளதாகவும் மேலும் காலம் தாழ்த்தாமல் காணிகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும்படியும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் காணிகளை விருத்தி செய்யாதோரின் நிலங்களைப்பறிமுதல் செய்யவும் அதிகாரமுண்டு எனவும் கூறப்பட்டுள்ளது. (அ)

## நம்முள்......

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நந்தன் பேசுகையில், சாதிப் பாகுபாடு காட்டி சமுதாயத்தில் ஒருவனை தாழ்த்திவைக்கும் ஒவ்வொரு தமிழனையும் இனத்தின் துரோகியெனப் பிரகடனப் படுத்தவேண்டும் என நாம்தீர்மானிக்கின்றோம். தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும்ஒருவேண்டுகோள். ஒரு ராஜலிங்கத்தை பாராளுமன்றத்திற்கோ அல்லது ஒரு சிலரை உள்ளூராட்சிமன்றங்களுக்கோ தேர்தல் மூலம் அனுப்புவதனால் சாதிப்பிரச்னை எந்த வகையிலும் தீர்ந்துவிடாது. எனவே அவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று தமிழினத்தின் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள் முன்னிலையில் கருத்தரங்குகளையும் அரசியல் வகுப்புகளையும் நடாத்தி தூயசிந்தனைத்தெளிவுடன் இந்தப் பிரச்னையைத் தீர்க்க வழிவகுக்கவேண்டும்.". (கா-அ)

## "விசாரணை செய்து நீதிவழங்குக"

(நெல்லியடி)

சாவகச்சேரி தொகுதியிலுள்ள மறவன்புலவு சகலகலாவல்லி பாடசாலை ஆசிரியர்கள், சிறுவர் தின விழாவில் நடந்துகொண்ட முறையை திருக்குறள் முன்னணிக் கழகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்வாசிரியர்கள் மீது உடனடியாக விசாரணைகளை நடாத்தி நீதி வழங்குமாறு மேற்படி முன்னணிச் செயலாளர் திரு. வண்ணை ஆனந்தன் மகஜரொன்று மூலம் வடமாநில அதிபதி திரு. ரி. மாணிக்கவாசகரை கோரியுள்ளார்.

நீதி வழங்காதவிடத்து கண்டன ஊர்வலமொன்றையும், பொதுக் கூட்டமொன்றையும் நடாத்தப்போவதாகவும் அம்மகஜரில் வண்ணை ஆனந்தன் குறிப்பிட்டுள்ளார். (அ)

## லோக சபை பதவிக்காலம் 5 வருடம்

புதுடில்லி, ஜூன் 20

இந்திய லோகசபையின் பதவிக்காலம் 6 வருடங்களிலிருந்து 5 வருடங்களாகக் குறைக்கப்பட்டது.

திருமதி இந்திராகாந்தியின் ஆட்சிக்காலத்தில் நெருக்கடிநிலை அமுலில் இருந்தபோது லோகசபையின் ஆட்சிக்காலம் 5 வருடங்களிலிருந்து 6 வருடங்களாக அதிகரிக்கப்பட்டது. (இ)

## தஞ்சையில் உருவான கூட்டணி இயங்கும்

### கருணாநிதி தகவல்

சென்னை, ஜூன் 20

தஞ்சாவூர் லோக சபை இடைத்தேர்தலில் தி. மு. க. தோல்வி அடைந்தாலும் இந்த இடைத்தேர்தலுக்காக ஏற்படுத்தப்பட்ட தி மு க-ஜனதா வலது-இடது கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டணி தொடர்ந்து இயங்கும்.

இவ்வாறு தி. மு. க. தலைவரும் தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான திரு. மு. கருணாநிதி நிருபர்களிடம் தெரிவித்தார்.

தஞ்சை மக்கள் அளித்த தீர்ப்பு இக்கூட்டணிக்கு எதிரானதல்ல என்றும் திரு. கருணாநிதி தெரிவித்தார். (இ)

## தெல்லிப்பழையில் இன்று நடக்கும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கல்வி வட்டாரக் கருத்தரங்கொன்று இன்று வியாழக்கிழமை காலை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கை வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு தி மாணிக்கவாசகர் தொடக்கி வைப்பார். பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, கலாநிதி ஆ சண்முகதாஸ், திரு சி மௌனகுரு, திரு ஆ சிவநேசச்செல்வன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (கா-அ)

## சுண்டிக்குளி இன்று பரிசளிப்பு விழா

(அரியாலை)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று மாலை நடைபெறுகிறது.

கல்லூரியில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் நடைபெறும் இவ்விழாவில் கல்லூரி அதிபர் திருமதி செல்லையா கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பார்.

இந்திய உயர் ஸ்தானிகர் திரு. தோமஸ் ஏபிரகாம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி ஏபிரகாம் பரிசில்களை வழங்குவார். (இ)

## சிறப்புரை

(சுழிபுரம்)

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்திகோவிலில் கார்த்திகை திருவிழாவாகிய இன்று இரவு ஏழு மணிக்கு இளைப்பாறிய ஆசிரியர் ஓதுவார் மு. கிருஷ்ணபிள்ளை 'கந்தரநுபூதி' என்னும் பொருள்பற்றி சிறப்புரையாற்றுவார்.

சட்ட விரோதமாக

# வாள் வைத்திருந்தவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(யாழ்ப்பாணம்)

பயங்கர ஆயுதம் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டி யாழ். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் எதிரிக்கு ஐந்துவருடம் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த செல்லர் நாகராசா (25வயது) சட்ட விரோதமாக வாள் ஒன்றை வைத்திருந்ததாக யாழ். சிறு குற்றத்தடுப்புப் பொலிசார் கடந்த ஆண்டு சந்தேகநபரைக் கைதுசெய்து யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்தனர்.

இம்மாதம் 15ம் திகதி இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது யாழ் நீதிபதி விமல் திசநாயக்கா எதிரிக்கு ஐந்து வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாதச் சிறைத்தண்டனை விதித்தார்.

யாழ். சிறு குற்றத் தடுப்பு பொலிஸ் அதிகாரி திரு எஸ் திருச்சிற்றம்பலம், எஸ் இரத்தினசபாபதி ஆகியோர் பொலிஸ் தரப்பில் ஆஜராகி வழக்கை நடாத்தினர். (கொ)

# சிறுமியின் காப்புத் திருட்டு: எதிரிக்கு 2 வருடச் சிறை

(யாழ்ப்பாணம்)

யாழ் பஸ் நிலையத்தில் குழந்தையின் 360 ரூபா பெறுமதியான காப்பை திருடியதாக குற்றஞ்சாட்டிதொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 2 வருட கடூழியசிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் ஜாமீல் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில், பூநகரியைச் சேர்ந்த செல்லத்துரை கதிர்காமநாதனும், மனைவியும் குழந்தையும், யாழ். பஸ்நிலையத்தில் நிற்கும்போது, குழந்தையின் கையில் அணிந்திருந்த 360 ரூபா பெறுமதியான காப்பை யேசுதாசன் நாதன் திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இவ்வழக்கில் சட்டத்தரணி ஆர். ஏ. ஜெகதீசன், பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் தம்பாபிள்ளையின் உதவியுடன் வழக்கை நடத்தினார்.

விசாரணை முடிவில் எதிரிக்கு 2 வருட கடூழிய சிறைத்தண்டனையும், அதன்பின் 2 வருட பொலிஸ் கண்காணிப்பும் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

வர்த்தகநிலைய வாசல்களில்

# படுத்திருந்த 19 பேர் நீதிமன்றத்தில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் இரவு நேரங்களில், சந்தேகத்திற்கிடமான முறையில், வர்த்தக நிலையங்களின் வாசல்களில் படுத்திருந்த ஆண்களும் பெண்களுமாக 19 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

யாழ். நீதவான் திரு. விமல் திஸநாயக்கா முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதவான், இவர்களில் சிலருக்கு தலா 10 ரூபாவும், மற்றையோருக்கு தலா 20 ரூபாவும் அபராதம் விதித்தார்.

யாழ். சிறு குற்றத்தடுப்பு அதிகாரிகளான திரு. எஸ். சிற்றம்பலம், திரு எஸ். இரத்தினசபாபதி, ஆகியோர் இவர்களை கைது செய்து கோர்ட்டில் ஆஜர் செய்தனர். (கோ)

# யாழ்ப்பாணத்தில் காணிப் பதிவு வேலைகள் மந்தம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் போதிய உத்தியோகத்தர்கள் இல்லாததால் உறுதிப் பதிவு வேலைகள் தாமதமடைந்து வருவதாகத் தெரிகிறது. கடந்த சில மாதங்களாக இவ் அலுவலகத்தில் காணிப்பதிவு வேலைகள் தாமதித்துவருவதால் பலர் தமது காணி உறுதிகளை உரிய காலத்தில் பெற முடியாத நிலை இருப்பதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பிறப்பு, இறப்பு அலுவலகத்திலும் கடந்த பல மாதங்களாகப் பிறப்பு இறப்புப்பத்திரம்பெறுவதில் தாமதம் இருந்துவந்தது. இவ்வலுவலகத்தில் படப்பிரதிசெய்யும் இயந்திரம்இயங்கத் தொடங்கியதிலிருந்து வேலைகள் தாமதமின்றி நடைபெறுகின்றன.

காணிப்பதிவகம், பிறப்பு இறப்பு திருமணப்பதிவு அலுவலகம் ஆகியவற்றில் தற்பொழுது வேலைகள் அதிகமாக இருப்பதாகவே கூறப்படுகிறது. காணிப்பதிவகத்தில் காணி உறுதிப்பிரதிகள் பெற விண்ணப்பிப்பவர்கள் தொகை அதிகரித்துள்ளதும் காணியுறுதிகள் பதிவு அதிகமாக இருப்பதுமே இந்த நெருக்கடிக்குக் காரணமெனத் தெரிகிறது. இவ்வலுவலகங்களிலிருக்கும் வேலைகளுக்குரிய ஊழியர்கள் போதியளவு இல்லாததால் வேலைகள் தேங்கிக் கிடக்கின்றன. (அ)

## உலக கிண்ணக் கிரிக்கெட்

லண்டன், ஜூன் 20

லண்டனில் நடைபெறும் உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டியின், அரைஇறுதிப் போட்டியில், மேற்கிந்தியக் கோஷ்டி 60 ஓவர்களில் 6 விக்கெட் நஷ்டத்துக்கு 293 ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தான் கோஷ்டி 43 ஓவர்களில் 2 விக்கெட் நஷ்டத்துக்கு 185 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து கோஷ்டி 60 ஓவர்களில் 8 விக்கெட் நஷ்டத்துக்கு 221 ஓட்டங்களை பெற்றது. நியூஸிலாந்துக் கோஷ்டி 54 ஓவர்களில் 6 விக்கெட் நஷ்டத்துக்கு 166 ஓட்டங்களை பெற்றது.

இலங்கை-கனடா

ஐ. ஸி. ஏ. வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டியில் இலங்கை கனடாவை எதிர்த்து நாளை விளையாடும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49; Telegram: Eelanaadu Tel: 489.